



இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வெற்றி வேட்பாளர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி மாந்தாங்கல் காந்தி நகர், மேட்டுதெரு பத்மாநகர் செட்டிதாங்கல் தண்டலம் வானாபாடி எடப்பாளையம் எருக்கந்தொட்டி கல்புதூர் கன்னிகாபுரம் கல்மேல்குப்பம் பகுதிகளில் கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களை ஆதரித்து, குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை கேட்டு, சி.பி.ஐ , முன்னாள் மாநில செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டு தீவிர வாக்குச் சேகரித்தார். ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார், ம.தி.மு.க. சட்டநாதன், காங்கிரஸ் குமார், சிபிஐ மாவட்ட செயலாளர் பி.துரை, புருஷோத்தமன், வி.சி.க. பாலமுருகன், சி.பி.எம். தண்டபாணி, நகர கழக செயலாளர் த.தமிழ்செல்வன், பேரூர் செயலாளர் கே.வி.பி.சங்கர், நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், பேரூராட்சி தலைவர் கோகிலா குமார் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாககள் உடனிருந்தனர்.



திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக மாணவர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் மாநில திமுக மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி உரையாற்றினார். உடன் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் எ.வ.குமரன் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், காலேஜ் ரவி, மு.க.கௌதமன், இரா.மின்னல்கமல் உட்பட பலர் உள்ளனர்.



நெய்வேலி சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர், சபா .இராஜேந்திரன் நெய்வேலி நகர பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது என்.எல்.சி, திராவிட தொழிலாளர் ஊழியர் சங்கத்தின் சிறப்பு தலைவர் ஆர்.கோபாலன் தலைமையில் இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் சபா.மணிமாறன் முன்னிலையில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். உடன் தலைமை கழக செயற்குழு உறுப்பினர் சா.ராசவன்னியன், மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி, பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, வி.சி.க, மருதமுத்து,நகர செயலாளர வி.குருநாதன், வீர.இராமச்சந்திரன், நன்மாற பாண்டியன், மதியழகன், கருப்பன், நாசர், இரவிச்சந்திரன், தொமுச தலைவர் ஜி.ஞான ஒளி, பொருளாளர் அ.அப்துல் மஜீத், அலுவலக செயலாளர் ஆர்.சீனிவாசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று தேர்தல் பிரச்சாரம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஏப். 13 -

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப் பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு: -



கழக இளைஞர் அணி செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் திருக்கோவிலூர் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட் பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அவர் களை ஆதரித்து இன்று (13.4.2026 - திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு திருக் கோவிலூர் பேருந்து நிலை யம் அருகே பிரச்சாரம் செய்ய உள்ளார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க. பொன்முடி அவர்களின் முன்னிலையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்ட ணியின் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு உறுப்பி னர்கள், உள்ளாட்சி அமைப் புகளின் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள், சமூக நல அமைப்புகள் மகளிர் அமைப்புகள், மாணவர் அமைப்பினர், பொதுநல அமைப்புகள், பொதுமக்கள் என அனைவரும் திரளாக கலந்துகொள்ள அழைக்கி றேன்

இவ்வாறு அவர் அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

### பர்கூர் சட்டமன்றத் தொகுதி

# கழக வேட்பாளர் மதியழகன் கிராமம், கிராமமாக வாக்கு சேகரிப்பு!

பர்கூர், ஏப். 13-

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கிருஷ் ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர், திமுக வேட் பாளர் மதியழகன் எம்எல்ஏ போட்டியிடுகிறார்.

அவர் பர்கூர் சட்டமன் றத் தொகுதி, நாகரசம் பட்டி பேரூராட்சிக்கு உட் பட்ட வேலம்பட்டி நாக ரசம்பட்டி தட்டக்கல் உள் ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாக்காளர் களை சந்தித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் திராவிட மாடல் அரசியல் நிறைவேற் றப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறியும், வருகிற திராவிட மாடல் 2.0 ஆட்சி யில் கழகத் தலைவர், முதல் வர் தளபதியார் அவர்களின் தலைமையில் அமையக்கூ டிய 2.0 ஆட்சியில் செயல்ப டுத்த உள்ள திட்டங்களை யும் வாக்காளர்களுக்கு எடுத்துக்கூறி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.




சிறுகதை மன்னன்
எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின்
35 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்புடையீர்,வணக்கம்

இன்று (13.04.2026 – திங்கட்கிழமை) சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் 35 ஆம் ஆண்டு நினைவு நாளன்று சிவகங்கை மாவட்ட தி.மு.க. செயலாளர்

மாண்புமிகு.தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர்

**கேஆர்.பெரியகருப்பன்** B.Com.BL., அவர்களின் தலைமையில் காலை 7 மணியளவில் திருக்கோஷ்டியூர் அன்னாரது இல்லத்தில் நினைவு அஞ்சலி செலுத்தி விட்டு அதனைத் தொடர்ந்து காலை 8.00 மணியளவில் அன்னாரின் நினைவிடம் சென்று மலர் அஞ்சலி செலுத்தப்படும்.இந்நிகழ்ச்சியில் கழகத்தினர் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

**இவண்**
**சிவகங்கை மாவட்ட தி.மு.க**
**மற்றும்**
**எஸ்.எஸ்.தென்னரசு குடும்பத்தினர்**



ஏப்ரல்-13, 2026
35 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சிறுகதை மன்னன்
எஸ்.எஸ்.தென்னரசு
முன்னாள் அமைப்பு செயலாளர்
அவர்களின் நினைவைப் போற்றுவோம்..

...இவண்...

**கேஆர்.பெரியகருப்பன்** B.Com.,B.L.,
கூட்டுறவுத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச்செயலாளர்

**மு.தென்னவன்** M.A.,
முன்னாள் அமைச்சர், மாநில இலக்கிய அணி புரவலர்

சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு வம்சம்
**எஸ்.எஸ்.ஏ.வல்லபாய்** B.V.A,PGAID.,
மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் – சிவகங்கை மாவட்டம்